வீட்டு வசதி மற்றும்
நகர்ப்புற வளர்ச்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

<u>கடித எண்.8449/நவ4(3)/2020–2, நாள் 23.09.2020</u>

அனுப்புநர்
அரசு முதன்மைச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–09.

பெறுநர்
நகர் ஊரமைப்பு இயக்குநர்,
சென்னை–02.

அய்யா,

பொருள்: நகர்ப்புற வளர்ச்சி – கட்டிடம் மற்றும் மனைப்பிரிவு குறிப்பிட்ட பரப்பளவு வரை மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் நடத்தப்படும் திட்டக்குழுமக் கூட்டத்தில் பொருள் வைக்காமல் உறுப்பினர் செயலரான இணை இயக்குநர் / துணை இயக்குநர் / உதவி இயக்குநர் ஆகிய கள அலுவலரே திட்ட அனுமதி வழங்க அதிகாரமளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை: நகர் ஊரமைப்பு இயக்குநரின் கடித எண்.7671/2020-T, நாள் 17.07.2020, 18.08.2020 மற்றும் 17.09.2020.

======

பார்வை 1–ல் காணும் தங்களின் கடிதங்களின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது. அக்கடிதங்களில், கட்டிடம் மற்றும் மனைப்பிரிவு குறிப்பிட்ட பரப்பளவு வரை மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் நடத்தப்படும் திட்டக்குழுமக் கூட்டத்தில் பொருள் வைக்காமல் உறுப்பினர் செயலரான இணை இயக்குநர் / துணை இயக்குநர் / உதவி இயக்குநர் ஆகிய கள அலுவலரே திட்ட அனுமதி வழங்க அதிகாரமளிக்க வேண்டுமென அரசிடம் ஆணை கோரப்பட்டது.

2. அதற்கிணங்க, நகர் ஊரமைப்பு இயக்குநரின் உத்தேசத்தை அரசு ஆய்வு செய்து கீழ்காணும் ஆணைகளை வெளியிடுகிறது:-

(i) தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டட மற்றும் வளர்ச்சி விதிகள் 2019–ன்படி மனை மற்றும் கட்டட ஒப்புதல் வழங்குவது தொழில்நுட்பம் சார்ந்தவை என்பதால் 2,00,000 ச.அடி வரையிலான குறைந்த உயரக் கட்டிடங்களுக்கும் (Non-high rise building) மற்றும் 10 ஹெக்டேர் வரையிலான மனைப்பிரிவுகளுக்கும் நடைமுறையிலுள்ள அதிகாரப் பகிர்வு ஆணையின்படி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் முன் ஒப்புதலைப் பெற வேண்டியவற்றிற்கு அவ்வாறான ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் உறுப்பினர் செயலரான நகர் ஊரமைப்பு துறையின் உதவி இயக்குநர்/துணை இயக்குநர்/இணை இயக்குநர்,

மாவட்ட ஆட்சியர் நடத்தும் குழுமக் கூட்டத்தில் பொருள் வைக்காமல், தொழில்நுட்ப அலுவலரான உள்ளூர் திட்டக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அவர்களே ஒப்புதல் வழங்கலாம். நேரடியாக திட்ட அனுமதி வழங்கலாம்

(ii) அவ்வாறு உறுப்பினர் செயலர் வழங்கிய அனைத்து திட்ட அனுமதி விவரங்களை பின்னர் வரும் திட்டக் குழுமக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தகவலாகத் தெரிவிக்கப்பட வேண்டும்

(iii) மேலும், தற்போதைய அதிகார பகிர்வின்படி நகர் ஊரமைப்பு இயக்குநரின் முன் ஒப்புதல் பெறுவதற்கான நடைமுறையில் உள்ள உத்தரவுகளை உறுப்பினர் செயலர் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் மேற்காண் வகையில் திட்ட அனுமதி வழங்குவதில் நடைமுறையை மாற்றம் செய்வதற்கு திட்டக் குழுமத்தால் உரிய தீர்மானமும் இயற்றப்பட வேண்டும்.

3. மேலும், இது தொடர்பாக, நகர் ஊரமைப்பு இயக்குநர், கள அலுவலகங்களுக்கு தகுந்த அறிவுறுத்தல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

23/9/20